IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.23/2021

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | JEEVARATHINAM |
| FATHER'S NAME | : | RAMACHANDIRAN |
| VILLAGE | : | GUDIYATHAM |
| OCCUPATION | : | VAO |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 22th day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் குடியாத்தம் பகுதியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 07.03.2014 அன்று பரதராமியில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது பரதராமிய காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை போன் மூலமாக அழைத்ததால் நானும், கிராம உதவியாளரும் காவல் நிலையத்திற்கு சென்றோம். ஆனந்தராஜ் மற்றும் சௌரி என்பவர்கள் அங்கணாம்பள்ளியில் ஆயுதங்கள் வைத்துள்ளதாக தகவல் வந்த‌ததால் சம்பந்தசட்ட இடத்திற்கு சென்று பார்க்க வேண்டும் என்று கூறியதால் சுமார் 08.00 மணியளவில் கொல்லை மேட்டில் உள்ள அவர்களது வீட்டிற்கு சென்று விசாரித்த போது அவர்களது வீட்டின் பின்புறம் நாட்டு துப்பாக்கி வைத்திருப்பதாக சொன்னதன் பேரில் மேற்படி நாட்டு துப்பாக்கியை எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் முறையே அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது. போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

குடியாத்தம் எனது சொந்த ஊராகும். நான் 18 வருடங்களாக கிராம நிர்வாக அலுவலராக உள்ளேன். சம்பவத்தின் போது நான் பரதராமியில் மட்டும் கிராம நிர்வாக அலுவலராக இருந்தேன் என்றால் சரிதான். பரதராமியில் மொத்தம் 8 கிராமங்கள் உள்ளது. 18 வருடங்களில் நீதிமன்றத்திற்கு சாட்சி அளிக்க நான் எத்தனை முறை வந்துள்ளேன் என்றால் 30 முறை இருக்கும். பரதராமி காவல் உதவி ஆய்வாளரை இவ்வழக்கிற்கு முன்பாகவே எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பொதுவாக காவல் ஆய்வாளர் வழக்கு சம்பந்தமாக அழைக்கும் போது அலுவலக ரீதியாக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பரதராமி காவல் உதவி ஆய்வாளர் அழைத்தவுடன் அலுவலக ரீதியாக நான் என்ன செய்தேன் என்றால் வருவாய் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்தேன். மேற்படி தகவலை நான் தொலைபேசி

மூலகமாக சொன்னேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தபோது வருவாய் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்த விவரத்தை சொன்னேனா என்றால் சொல்லவில்லை. கிராம நிர்வாக அலுவலகத்தில் பொதுவாக கையேடு இருக்கும் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலகத்தில் கையேடு இருக்கும் என்றாலும், அலுவலகத்தில் இருந்து வெளியில் செல்லும்போது கையேட்டில் குறிப்பிட்டுவிட்டு செல்வோம் என்றாலும் நடைமுறையில் இல்லை. நான் நீதிமன்றத்தில் இதுவரை அளித்துள்ள சாட்சியங்களில் ஏதும் கையேடு இருக்கும் என்று குறிப்பிட்டதில்லை என்றால் சரிதான். 18 வருடங்களில் நீதிமன்றத்தில் வேறொரு வழக்கில் சாட்சி அளிக்கும்போது கையேடு வைத்திருப்பதாக குறிப்பிட்டுவிட்டு தற்போது இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அலுவலகத்தில் கையேடு வைத்திருக்கும் நடைமுறை உள்ளது என்றாலும். நான் தான் பின்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்ததை எந்த இடத்தில் இருந்து கைப்பற்றினார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. கிராமத்தின் முழுபொறுப்பையும் கையாளும் பதவியில் இருப்பதால் சரியாக ஞாபகம் இல்லை என்று சொல்வது சம்பவ இடத்திற்கு உண்மையில் செல்லவில்லை என்பதாலும் வழக்கு சொத்தை என் முன்னிலையில் கைப்பற்றபடவில்லை என்பதாலும் என்றால் சரியல்ல. என்னுடைய அலுவலக நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி ஆகும். காவல் உதவி ஆய்வாளர் அழைத்தவுடன் முதலில் காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு சென்றபோது காலை 07.00 மணி இருக்கும் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது உதவி ஆய்வாளர் இருந்ததார். எவ்வளவு நேரம் காவல் நிலையத்தில் இருந்தோம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தை ஏற்கனவே கைபபற்றி காவல் நிலையத்தில் வைத்திருந்ததால்தான் எவ்வளவு நேரம் காவல் நிலைத்தில் இருந்தோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரியல்ல. காவல் நிலையதில் இருந்து சம்பவ இடத்திற்கு நான் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் கிராம உதவியாளருடன் சென்றேன். போலிசார் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. உண்மையிலேயே சம்வ இடத்திற்கு சென்று இருந்தால் போலிசார் வந்த வாகனம் தெரிந்திருக்கும் என்றாலும், சம்பவ இடத்திற்கு போகததால் தான் தெரியவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை கைப்பற்றிய நேரம் காலை 08.30 மணியளவில் இருக்கும். வழக்க சொத்தை அங்கணாம்பள்ளியில் உள்ள கொல்லை மேட்டில் கைப்பற்றினோம். அங்கணாம்பள்ளி கொல்லைமேடு என்னுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டது என்றால் சரிதான். என் முன்னிலையில் நாட்டு துப்பாக்கி மட்டும் கைப்பற்றினார்கள் என்றாலும், மகசரில் அதை மட்டும் குறிப்பிட்டு கையொப்பம் பெற்றார்கள் என்றாலும் சரிதான். நான் கையொப்பம் செய்த மகசரை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தார்களா அல்லது ஏற்கனவே எழுதியிருந்த தாளிளில் கையொப்பம் செய்தேனா என்றால் சம்பவம் இடத்தில் வைத்துதான் தயார் செய்தார்கள். மகசரில் என்ன எழுதியிருந்ததது என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. கையொப்பம் செய்த தாளில் ஏதாவது அடித்தல் திருத்தம் இருந்ததா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. வழக்கு சம்பந்தமாக எத்தனை கையொப்பங்கள் செய்தேன் என்றால் 2 கையொப்பங்கள் செய்தேன். மேற்படி 2 கையொப்பத்தில் முதலாவதாக எந்த கையொப்பம் எதற்றாக போட்டேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. காவல் ஆய்வாளர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர் கேட்டுகொண்டதால் கையொப்பம் போட்டேன் என்றாலும் சம்பவ இடத்திற்கு சென்று வழக்கு சொத்து கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடம் மற்றும் வழக்கு சொத்து கைப்பற்றியதாக சொல்லப்படும் இடம் யாருக்கு

சொந்தமானது என்பதற்கு சர்வே எண். அல்லது வேறு ஆதாரங்கள் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் காவல் ஆய்வாளர் கேட்டுகொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**Sd/-R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**